**APPM-LI/25**

Don't write anything in this space

| | | |
|---|---|---|
| தேர்வு | : | அரசு உதவி வழக்கு நடத்துநர், நிலை - II க்கான முதன்மை எழுத்துத் தேர்வு |
| Examination | : | Assistant Public Prosecutor, Grade - II, Main Written Examination |
| பாடம் | : | தாள் - II<br>சட்டம் தாள் - I<br>(பட்டப்படிப்புத் தரம்)<br>(விரிந்துரைக்கும் வகை) |
| Subject | : | Paper - II<br>LAW – PAPER - I (Degree Standard) (Descriptive Type) |
| தேர்வு நாள் | : | 27.07.2025 மு.ப. |
| Date of Examination | : | 27.07.2025 F.N. |

Don't use this area

Booklet Serial No. ______

Don't write anything in this space


| | | |
|---|---|---|
| தேர்வு | : | அரசு உதவி வழக்கு நடத்துநர், நிலை - II க்கான முதன்மை எழுத்துத் தேர்வு |
| Examination | : | Assistant Public Prosecutor, Grade - II, Main Written Examination |
| பாடம் | : | தாள் - II<br>சட்டம் தாள் - I<br>(பட்டப்படிப்புத் தரம்)<br>(விரிந்துரைக்கும் வகை) |
| Subject | : | Paper - II<br>LAW – PAPER - I (Degree Standard) (Descriptive Type) |
| தேர்வு நாள் | : | 27.07.2025 மு.ப. |
| Date of Examination | : | 27.07.2025 F.N. |


TNPSC - SPECIMEN

Register No. ______

Signature of the candidate with date.

**Certificate**

I have issued this Question-cum-Answer booklet to this candidate after verifying his / her Register Number., photo and signature in the hall ticket.

Signature of the Room Invigilator with date.

**Certificate**

(To be signed after the completion of the examination.)

I have struck out all the unanswered blank spaces in the Question-cum-Answer Booklet by using black ink pen (Fountain Pen or Ball point pen or Gel pen) which I have used for writing this examination.

Signature of the candidate with date.

TNPSC SPECIMEN
Do not use this area

# தாள் – II / PAPER – II

## சட்டம் – தாள் – I / Law – Paper – I

## விரிந்துரைக்கும் வகை / Descriptive Type

## பட்டப்படிப்புத் தரம் / Degree Standard

கால அளவு : மூன்று மணி நேரம் — மொத்த மதிப்பெண்கள் : 100

Duration : 3 Hours — Total Marks : 100

(இவ்வினா-விடைத்தாள் தொகுப்பு 56 பக்கங்களைக் கொண்டுள்ளது)

(This question-cum answer booklet consists of 56 pages)

**அறிவுரைகள் / Instructions**

**(கீழ்க்கண்ட அறிவுரைகளை தேர்வர்கள் தவறாமல் பின்பற்ற வேண்டும்)**

**(Candidates shall comply with the following instructions)**

1. தேர்வர்கள் இவ்வினா-விடைத்தாள் தொகுப்பு மொத்தம் 56 பக்கங்களைக் கொண்டுள்ளது என்பதை முதலில் உறுதி செய்து கொள்ள வேண்டும். வினா-விடைத்தாள் தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், தேர்வர் அதனை தேர்வு தொடங்கும் நேரத்திற்கு முன்னதாக அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு முழுமையான வினா-விடைத்தாள் தொகுப்பினை கட்டாயம் பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு குறைபாடு குறித்து முறையிட்டால், மாற்றித் தரப்படமாட்டாது.

   Candidates shall first ensure that this question-cum-answer booklet contains 56 pages. If any defect is noticed in the question-cum-answer booklet, it shall be reported to the room invigilator before the commencement of the examination and candidate must get it replaced with another complete question-cum-answer booklet. If the defect is reported after the commencement of the examination, it will not be replaced.

2. (i) தேர்வர்கள் ஒவ்வொரு வினாவிற்கும் விடை எழுதுவதற்கென வினா-விடைத்தாள் தொகுப்பில் ஒதுக்கப்பட்ட இடத்தில் மட்டுமே விடையளிக்க வேண்டும். விடையளிக்க ஒதுக்கப்பட்ட இடத்திற்கு வெளியே எதையும் எழுதக்கூடாது.

   Candidates have to answer each question in the question-cum-answer booklet, only in the space provided for that question. They should not write anything outside the space provided.

   (ii) தேர்வர்கள் வினாக்களுக்கு விடையளித்த பின்னர் மீதமுள்ள வெற்றிடங்களையும் விடையளிக்காத வினாவுக்கான வெற்றிடங்களையும் அனுமதிக்கப்பட்ட கருமை நிற மை பேனாவினால் குறுக்கு கோடிட்டு கண்டிப்பாக அடித்துவிட வேண்டும். அடித்த பகுதிகளில் கையொப்பம் இடக்கூடாது.

   Candidates should strike out the unused blank spaces of the answered questions and blank spaces of unanswered question with the permitted black colour ink pen without fail. Should not sign in the spaces struck out.

TNPSC - SPECIMEN

3. தேர்வர்கள் இவ்வினா-விடைத்தாள் தொகுப்பில் ஒவ்வொரு பிரிவிலும் அறிவுறுத்தப்பட்டுள்ள எண்ணிக்கையிலான வினாக்களுக்கு மட்டுமே விடையளிக்க வேண்டும். அதற்கு மிகையான எண்ணிக்கையிலான வினாக்களுக்கு விடையளித்தால், ஒவ்வொரு பிரிவின் முடிவிலும் மிகையான எண்ணிக்கையில் விடையளிக்கப்பட்டவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

Candidates should answer the number of questions as instructed in the question cum answer booklet in each section. If more than the required number of questions are answered, the excess questions answered at the end of each section will not be taken into account.

4. தேர்வர்கள் தங்களது பதிவு எண்ணை இவ்வினா-விடைத்தாள் தொகுப்பில் எந்த இடத்திலும் எழுதக்கூடாது. இந்த அறிவுரையை மீறும் தேர்வர்களின் வினா-விடைத்தாட்கள் செல்லாததாக்கப்படும்.

Candidates should not write their Register Number anywhere in this question-cum-answer booklet. The question cum answer booklet of those candidates who violate this instruction, shall be invalidated.

5. தேர்வர்கள் இவ்வினா-விடைத்தாள் தொகுப்பில் கையொப்பமிடுவதற்கென குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு இடங்களில் மட்டும் கையொப்பமிட வேண்டும். வேறு எந்த இடங்களிலும் கையொப்பம் இடுதல் கூடாது. குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு இடங்களில் கையொப்பமிடாத தேர்வர்களின் வினா-விடைத்தாட்கள் செல்லாததாக்கப்படும்.

Candidates should sign in two designated places only. They should not sign in any other places other than the two places. Question cum answer booklets, not signed by the candidates in the designated place shall be invalidated.

6. தேர்வர்கள் இந்த வினா-விடைத்தாள் தொகுப்பிலிருந்து எந்தத் தாளையும் கிழித்துவிடக் கூடாது.

Candidates should not tear off any leaves from this question-cum-answer booklet.

7. இத்தேர்வை பொறுத்தவரை, அழகாக எழுதுவதற்காகவும், எழுத்துப்பிழையின்றி எழுதுவதற்காகவும் தனியாக மதிப்பெண்கள் ஒதுக்கப்படவில்லை.

No separate marks will be awarded for neatness of writing and correctness of spelling in respect of this examination.

8. இவ்வினா-விடைத்தாள் தொகுப்பில் வினாக்கள் தமிழ் மற்றும் ஆங்கில வடிவங்களில் உள்ளன. அனைத்து இனங்களிலும் ஆங்கில வடிவில் தரப்பட்டுள்ளவையே இறுதியானவை.

In this question-cum-answer booklet, questions are in Tamil and English versions. In all matters, English version is final.

9. தேர்வர்கள் கடிதம் வரைதல், இறுதி அறிக்கை எழுதுதல் போன்ற வினாக்களுக்கு விடையளிக்கும் பொழுது தங்களது பெயரையோ, பதிவெண்ணையோ எழுதக்கூடாது தங்களது பெயரில் கையொப்பமிடவும் அனுமதியில்லை. அவ்வாறான வினாக்களுக்கு பதிலளிக்கும் பொழுது வினாக்களில் குறிப்பிட்டுள்ள பெயர் மற்றும் முகவரியையே பயன்படுத்த வேண்டும்.

வினாக்களில் பெயர், முகவரி ஆகியவை குறிப்பிடப்படவில்லையெனில், 'அனுப்புநர்', 'பெறுநர்' முகவரிகளில் **XYZ** அல்லது **XXX** போன்ற பொதுப் பெயர்களை மட்டுமே எழுதவேண்டும்.

Candidates should not write their name, register number while answering letter writing, Final Report type questions. Affixing signature in their name is also not permitted. To answer such questions, the name and address given in the questions alone should be used.

If no name is given in the question, they should write the general names like **XYZ** or **XXX** is 'From' and 'To' addresses.

TNPSC - SPECIMEN

## பிரிவு — அ

## SECTION — A

***குறிப்பு :*** i) 1 முதல் 3 வரை உள்ள வினாக்களில் எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

***Note :*** Answer any **TWO** questions from Question No. 1 to 3.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் **200** சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

Answer each question, not exceeding **200** words.

iii) ஒவ்வொரு வினாவிற்கும் **பத்து** மதிப்பெண்கள்

Each question carries **ten** marks.

**(2 × 10 = 20)**

| | |
|---|---|
| Q.No. 1 | இந்திய தண்டனை சட்டத்தின்கீழ் அதிகரிக்கப்பட்ட தண்டனையின் விதிகளை குறித்தும், தனிமை சிறை குறித்தும் விவரி.<br><br>Write about the law, regarding enhanced punishment, solitary confinement under the Indian Penal Code. |
| Q.No. 2 | பொருத்தமான வழக்குகளுடன் அரசுக்கு எதிரான குற்றங்களைப் பற்றி விளக்குக.<br><br>Explain about the offences against the state with relevant case laws. |
| Q.No. 3 | 2023–பாரதிய நீதிச் சட்டத்தின்கீழ் குற்றவாளிகளுக்கு அளிக்கப்படும் பல்வேறு தண்டனை வகைகளை விளக்கவும்.<br><br>Explain the various types of punishment enumerated under the B.N.S. – 2023. |

TNPSC - SPECIMEN

பிரிவு — ஆ

## SECTION — B

(மொழிபெயர்ப்பு)

## (TRANSLATION)

*குறிப்பு :* i) கொடுக்கப்பட்டுள்ள **இரண்டு** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

***Note :*** Answer **both** the questions.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் **பத்து** மதிப்பெண்கள்.

Each question carries **ten** marks.

**(2 × 10 = 20)**

| Q.No. | Translation English to Tamil |
|---|---|
| 4 | In the High Court of Madras<br>Criminal Appellate Jurisdiction<br>Criminal Appeal No.<br>Judgement delivered Hon'ble Justice Misra J<br>Dated :<br>The court observed that the assailants forcibly dragged the deceased Mahesh from the house where he was taking shelter on account of the fear of the accused and took him away at about 2.30 in the night. Next day in the morning his mangled body was found lying in the hospital. The accused had not given any explanation as to what happened to Mahesh after he was abducted by them. The learned Session Judge after referring to the law on circumstantial evidence had observed that there was a missing link in the chain of evidence after the deceased was last seen together with the accused persons and the discovery of the dead body in the hospital and had concluded that the procecutor failed to establish the charge of murder against the accused persons beyond any reasonable doubt. Hence, this court finds that the guilt is not found and the accused acquitted as per the evidence produced before this court. This Hon'ble court has allowed this appeal. |

TNPSC - SPECIMEN

**Q.No. 5** Translation Tamil to English

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம்

மேல்முறையீட்டு அசல் வழக்கு

தீர்புரை பகரப்பட்டது

மாண்புமிகு நீதியரசர் அவர்கள்

நாள் :

மனுதாரர், கடலூர் 2வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அமர்வு வழக்கு எண். 239/2021 என்ற வழக்கினை வேறு சார்பு நீதிமன்றத்திற்கு மாற்ற உத்தரவிடக் கோரி Tr.Crl.M.P.No. 1705/2022 என்ற மனுவினையும், மேற்படி பிரதான மனு முடியும் வரை. மேற்படி அமர்வு வழக்கின் நடவடிக்கையை நிறுத்தி வைக்க தடை உத்தரவு பிறப்பிக்ககோரி Crl.M.P.No. 4451/2022 என்ற மனுவினையும் தாக்கல் செய்துள்ளார். மேற்படி Crl.M.P.No 4451/2022 in 1705/2022 என்ற தடை உத்தரவு மனுவில் எதிருரை தாக்கல் செய்ய 23.7.2022 அன்று வாய்தா வைக்கப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில், தடை உத்தரவு மனு இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதாக கூறி, மனுதாரர் வழக்கறிஞர், கடலூர், 2-ஆவது கூடுதல் அமர்வு நீதிபதி அவர்களிடம் குறிப்பாணை தாக்கல் செய்ததை கருத்தில் கொள்ளாமல், மேற்படி அமர்வு வழக்கில் புலன்விசாரணை சாட்சியத்திற்காக வாய்தா வைத்துள்ளதாகவும், அவ்வாறு புலன்விசாரணை அதிகாரியை முதல் மற்றும் குறுக்குவிசாரணை செய்து விட்டால், இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட Tr.Crl.M.P.No. 1705/2022 என்ற மனு பயனற்றதாகிவிடும் என்றும், எனவே, தடை உத்தரவு மனுவின் விசாரணையை முன் கொணர வேண்டுமாய் கூறப்பட்டுள்ளது. மனுதாரர் கூறியுள்ள சங்கதிகளுக்கு அரசு வழக்கறிஞர் ஆட்சேபணை தெரிவித்திருந்த போதிலும், வழக்கின் தன்மைகளையும், சூழ்நிலைகளையும் கருத்தில் கொண்டு மேற்படி தடை உத்தரவு மனுவினை முன்கொணரலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து, இவ்வாறாக இம்மனுவில் பிரச்சனைக்குத் தீர்வு காணப்படுகிறது.

முடிவாக இம்மனுவை அனுமதித்து 23.7.2022 அன்று வாய்தா வைக்கப்பட்டுள்ள மேற்படி Crl.M.P.No 4451/2022 in Trl.Crl.M.P.No. 1705/2022 என்ற தடை உத்தரவு மனுவினை 10.7.2022ம் தேதிக்கு முன்கொணர உத்தரவிடப்படுகிறது.

TNPSC - SPECIMEN

## பிரிவு — இ

## SECTION — C

*குறிப்பு :* i) 6 முதல் 8 வரை உள்ள வினாக்களில் எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

***Note :*** Answer any **TWO** questions from Question No. 6 to 8.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் **400** சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

Answer each question, not exceeding **400** words.

iii) ஒவ்வொரு வினாவிற்கும் **பதினைந்து** மதிப்பெண்கள்

Each question carries **Fifteen** marks.

**(2 × 15 = 30)**

| | |
|---|---|
| Q.No. 6 | இ.த.ச. பிரிவுகள் 498-அ மற்றும் 304-ஆ, ஆகியவை ஒன்றுடன் ஒன்று தனிப்பட்டவையா? பிரிவு 304-ஆ–ன் கீழ் குற்றஞ்சாட்டப்பட்ட நபரினை, பிரிவு 498-அ–ன் படி குற்றஞ்சாட்டவில்லையென்றாலும், தண்டிக்க இயலுமா?<br><br>Are, Sec. 498-A IPC and Sec. 304-B of IPC are mutually exclusive? Whether a person charged with Sec. 304-B IPC can be convicted under Sec. 498-A IPC without charge being there. |
| Q.No. 7 | ஒரு நபரின் எத்தகைய செய்கைகள் பாரதிய நியாய சன்ஹிதா 2023 சட்ட சரத்துகளின் கீழ் அவதூறாகக் கருதப்படும். அவதூறுக்கான விலக்குகளை எடுத்தியம்புக.<br><br>Explain what acts of an individual are amount to defamation under the provisions of BNS. 2023. State the exceptions. |
| Q.No. 8 | பாலியல் துன்புறுத்தல் என்பதனை வரையறு. மேலும் இக்குற்றத்தின் குற்றவாளிகள் "பாலின பாகுபாட்டை" பற்றி BNS, 2023 விளக்குவது பற்றி ஆராய்க.<br><br>Define Sexual Harassment and examine the amendment on gender neutrality of the perpetrator of the crime under BNS, 2023. |

TNPSC - SPECIMEN

## பிரிவு — ஈ

## SECTION — D

*குறிப்பு :* i) 9 (a) **அல்லது** 9 (b) **மற்றும்** 10 (a) **அல்லது** 10 (b) ல் உள்ள வினாக்களுக்கு கண்டிப்பாக விடையளிக்கவேண்டும்.

***Note :*** Answering the questions from Question No. 9 (a) **or** 9 (b) **and** 10 (a) **or** 10 (b) are compulsory.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் **400 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.**

Answer each question, not exceeding **400** words.

iii) ஒவ்வொரு வினாவிற்கும் **பதினைந்து** மதிப்பெண்கள்.

Each question carries **Fifteen** marks.

**(2 × 15 = 30)**

| Q.No. | |
|---|---|
| 9 (a) | குற்றவியல் வழக்கில் புலன் விசாரணை நடைமுறைகள் எவ்வாறு இறுதி அறிக்கை தாக்கல் செய்ய உறுதுணையாக முன்நடைமுறை நீதிமன்ற விசாரணைக்கு இருக்கிறது என ஆய்வு செய்க.<br><br>Examine the filing of final report and procedure of investigation in a pretrial procedure.<br><br>**(அல்லது)**<br><br>**(Or)** |
| 9 (b) | கீழ்காணும் பொருண்மைக்கு குற்றசாத்தினை வனையவும்.<br><br>'அ' 16.4.2024 அன்று திருச்சியில் திருட்டு குற்றம் புரிந்துள்ளார். அவர் இதே போல் குற்றத்தினை இதற்கு முன்பு ஒரே ஆண்டில் அதே குற்றத்தை செய்துள்ளார். இந்நிலையில் குற்றசாத்தினை வனையவும்.<br><br>Frame the charges on the following facts.<br><br>'A' committed an offence of theft at Trichy on 16.4.2024 and he had been committed previously for the same offence within year. |

TNPSC - SPECIMEN

| Q.No. | |
|---|---|
| 10 (a) | பாரதிய நாகரிக சுரக்ஷா சன்ஹிதா பிரிவு 193(1) ன் படி, ஒவ்வொரு புலன் விசாரணையும், தேவையற்ற கால தாமதமின்றி முடிக்கப்பட வேண்டும் என கூறப்பட்டுள்ளது. அதே சமயத்தில், அச்சட்டம் சில குறித்த வகை குற்றங்களுக்கு, ஒரு குறிப்பிட்ட காலவரையறையும் அறிமுகப்படுத்தியுள்ளது. அவ்வாறு கூறப்பட்டுள்ள குறித்த வகை குற்றங்களுக்கான, குறிக்கப்பட்டுள்ள கால வரையறை குறித்து சுருக்கமாக விளக்குக.<br><br>As per Sec. 193(1) of BNSS, every investigation shall be completed without unnecessary delay. At the same time, the Sanhita introduces specific time frame for some specific offences. Briefly explain about that specific time frame for specific offences.<br><br>**(அல்லது)**<br>**(Or)** |
| 10 (b) | "ஆ", "இ" மற்றும் "ஈ" ஆகியவர்களுக்கு பீதி உண்டாக்கும் நோக்கத்தோடு, அவர்களது உடல்களுக்குக் கேடு விளைவிப்பதாக, ஒரே நேரத்தில் அவர்களை "அ" அச்சுறுத்துகிறார். இதில் எந்த செயலுக்காக, "அ" குற்றம் சுமத்தப்பட்டு எந்த குற்றச்சாட்டு வணையப்படலாம் மற்றும் தண்டிக்கப்படலாம் என்பதை பா.நீ.ச. மற்றும் பா.கு.பா.ச. வகையங்களுடன் விளக்கவும்.<br><br>"A" threatens B, C and D at the same time with injury to their persons with intent to cause alarm to them. For which act, "A" may be charged with and convicted of what offence and what would be the nature of framing of charges under B.N.S. and B.N.S.S. provisions. |

TNPSC - SPECIMEN